பெண்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதில் தமிழ்நாடு முதலிடம்!

3 ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 545 விருதுகள்!

சட்டப் பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிலுரை

சென்னை, ஜூலை 1- சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரையில், பெண்களுககு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது என்றும் மூன்று ஆண்டுகளில் மக்கள் நல்வழ்வுத்துறைக்கு 545 விருதுகள் கிடைத்துள்ளன என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை யில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரை வருமாறு:-

நாடாளுமன்றத்திற்கு இதுவரை 18 முறை தேர்தல்கள் நடைபெற்று முடிந்தி ருக்கிறது. 18 முறையும் நடைபெற்ற தேர்தல்களில் முதல்முறையாக தமிழ கத்தில் இவ்வளவு பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு கட்சி வெற்றி பெற்ற தில்லை என்கின்ற நம்முடைய மாண்பு மிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர் கள். (மேசையைத் தட்டும் ஒலி) 5,72,155 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு தொகுதி வெற்றியைப் பெற்றிருப் பதை என்பது, முதன்முறையாக தமிழ கத்திற்குக் கிடைத்திருக்கிற ஒரு மிகப்பெ ரிய அளவிலான சாதனை. 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 2 தொகுதிகள்; 3 இலட் சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தி யாசத்தில் 6 தொகுதிகள்; 2 இலட்சத்திற் கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 14 தொகுதிகள்; 1 இலட்சத்திற்கும் மேற் பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 11 தொகு திகள்; 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 3 தொகுதி கள்; 50 ஆயிரத்திற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் 3 தொகுதி கள் என்கின்ற வகையில் 40க்கு 40ம் என்கின்ற அந்த இடங்களை வென்றெ டுத்த (மேசையைத் தட்டும் ஒலி) நம்மு டைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களை வணங்கி, எனது பதி லுரையைத் தொடங்குகின்றேன்.

மானியக் கோரிக்கை மீதான விவா தத்தில் மன்ற உறுப்பினர்கள் 8 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். அதில் பேரவையின் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி அவர்கள் பேசும் போது, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இருதய உள்ளுடுருவி கதிரியக்க ஆய்வகங்கள் Cath Lab (Catheterization Laboratory) என்கின்ற அதிநவீன சாதனம் ஒன்று வேண்டும் என்கின்ற கோரிக்கை இங்கே வைத்திருக்கிறார்கள். அதே கோரிக்கையினை இதற்கு முன்னால் பொதுப்பணித் துறையின் அமைச்சர் தடுப்பூசி ஒன்றை போட வேண்டுமென் கிற கோரிக்கையை கடந்த மானியக் கோரிக்கையின்போது பேசியதாகச் சொன்னார்கள். அந்தவகையில், திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, சென்னை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்று அறிவித் தோம். ஆனாலும், ஒன்றிய அரசு நாடு முழுவதுமே அந்தத் திட்டத்தை செயல்ப டுத்துகிறோம் என்று தடுப்பூசியை ஒன்றியரசு தருகிறோம் என்று சொல்லி யிருக்கின்ற காரணத்தினல் அந்தத் திட்டம் மாநிலம் முழுவதும் விரைந்து செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதை யும் அவருக்கு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மன்ற உறுப்பினர் எம்.ஆர். காந்தி பேசுகிற போது, கன்னி யாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைக்கும் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கும் இரண்டு PET CT scan கள் வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையைப் பொறுத்தவரை, ஏற்கெ னவே கடந்த 6 மாதங்களுக்கு முன் னால், PET CT scan இயக்கி வைக்கப்பட் டிருக்கிறது என்பது மன்ற உறுப்பின ருக்குத் தெரியாமல் இருக்கிறது. அது ஏற்கெனவே இயக்கி வைக்கப்பட்டி ருக்கிறது. இந்த அரசு அமைவதற்கு முன்னால், இரண்டு இடங்களில் மட் டுமே PET CT scanகள் இருந்தது. முதல மைச்சர் அவர்கள், புற்றுநோய் பாதிப்பு களை அறிந்த காரணத்தினால், இன்றைக்கு நெல்லை, சேலம், கோவை, காஞ்சிபுரம், காஞ்சிபுரத்தில் மட்டும் இன்றைக்கு 5 இடங்களில் அந்த PET CT scanகள் புதியதாக அமைத்திருக் கிறார்கள். கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னால், இரண்டு இடங்களில் மட் டுமே இருந்த PET CT scanகள் இன் றைக்கு 7 இடங்களில் இருந்துகொண்டி ருக்கின்றன.

அதில் ஒன்று நெல்லை என்பதை மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இன்னொன்றை யும் கேட்டார், கன்னியாகுமரி ஆசாரிப் பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் PET CT scan ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கி றார். ரூபாய் 4 கோடி செலவில் Teleco balt ஒன்று அங்கே அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

23 கோடி ரூபாய் செலவில் ஒரு critical care block ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ரூபாய் 2 கோடி செலவில் அந்த மருத்துவமனையை மேம்படுத்தும் பணிகள் அங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக ளெல்லாம் இன்றைக்கு ஏற்கெனவே நிறைவேறியும் கொண்டிருக்கிறது, நிறைவேற்றப்படவும் இருக்கிறது.

ஊத்தங்கரையில் அவசர சிகிச்சைப் பிரிவு!

அதேபோல், பெருமதிப்பிற்கு ரிய மன்ற உறுப்பினர் மதியழகன் பேசும்போது, ஊத்தங்கரையில் ஒரு அவசர விபத்துகால சிகிச்சை பிரிவு ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கி றார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, நிச்சயம் அந்த இடம் அமைத்துத் தர வேண்டிய இடம்தான். அது அமைத்துத் தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

அதேபோல், மன்ற உறுப்பினர் எஸ். எஸ். பாலாஜி அவர்கள் சிதம்பரம் அண் ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்து வமனைக்கு வேண்டிய அரசாணைப் பற்றி பேசியிருக்கிறார். அந்த அர சாணை ஏற்கெனவே, code of conduct வருவதற்கு முன்னாலேயே தயார் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. மிக விரைவில் அது publish செய்யப்ப டும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் பேசும்போது; அவருடைய தொகுதியில் துணை சுகாதார நிலையங்களை இணைத்து ஓர் ஆரம்ப சுகாதார நிலை யம் ஒன்று வேண்டுமென்று கேட்டிருக் கிறார். முதலமைச்சர் அவர்களின் வழி காட்டுதலின்படி, கடந்த ஓராண்டுக்கு முன்னால் ஒன்றிய அரசிடம் பேசி, புதிய தாக 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் வாங்கி இன் றைக்கு தரப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், இந்த ஆண்டுமேகூட, ஒன் றிய அரசில் புதியதாக சுகாதார அமைச் சராக பொறுப்பேற்றிருக்கின்ற திரு. நட்டா அவர்களை நானும், துறையின் செயலாளர் அவர்களும் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்க ளின் ஆலோசனைகளைப் பெற்று சந் திக்கவிருக்கின்றோம். சந்திக்கும்போது, புதியதாக 100 ஆரம்ப சுகாதார நிலை யங்களுக்கான வேண்டுகோள் விடுக்க விருக்கின்றோம். அது வரும்போது நிச்ச யம், ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் அவர்களுடைய கோரிக்கை நிவர்த்தி செய்யப்படும்.

அதேபோல், தளி சட்டமன்ற உறுப்பி னர் ட்டி. இராமச்சந்திரன் பேசும்போது, பெட்டமுகிலாளம் என்கின்ற பகுதியில் இருக்கின்ற மலைவாழ் மக்கள் பாதிப் புக்குள்ளாகியிருப்பதைச் சொன்னார் கள். அவருக்கு நன்றாகவே தெரியும். கடந்த ஓராண்டுக்கு முன்னால், பெட்ட முகிலாளம் மலைக் கிராமத்தில் இது வரை எந்த அரசியல்வாதியும் வந்த தில்லை. எந்த அதிகாரியும் வந்ததில்லை.

மலைக் கிராமத்து மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை

ஒரு எட்டு கிராமங்களுக்கு 15 கிலோ மீட்டர் மலை கிராமங்களுக்கு நடந்தே சென்று, அவர்களுடைய கோரிக்கை களை கேட்டு, அங்கே இரண்டு பேருக்கு

மலைக் கிராம மக்களுக்கு சிகிச்சை கிடைக்க நடந்து சென்று ஆய்வு செய்தேன்!

அவர்களும் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அங்கே மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுகிறபோது, வேலூருக்குச் செல்ல வேண்டிய அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது என்கின்ற வகையில் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு அறிவிப்புகளில் அது இடம் பெற இருக்கிறது (மேசை யைத் தட்டும் ஒலி) என்பதை தொடக்கத் திலே கு. பிச்சாண்டி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதே போல்தான் மன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் பேசும்போது, திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் ஒரு Cath Lab (Catheterization Laboratory) வேண் டும் என்கின்ற கோரிக்கையை வைத்தி ருக்கிறார்கள். அக்கம் பக்கத்திலே இருக் கிற நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு அந்த இருதய பாதிப் புகள் ஏற்படுகிறபோது, சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது.

சென்னைக்கு வருவதற்குள்ளா கவே அவர்களுக்கு உயிர் பாதிப்பு ஏற்ப டுகிறது என்கின்ற காரணத்தைச் சொல்லி, அவரும் கேட்டிருக்கின்ற கார ணத்தினால், முதலமைச்சர் அவர்கள், இங்கே யார், யாருக்கு என்ன விருப்பம் இருக்கிறதோ அதை நிறைவேற்றித் தரும் முதலமைச்சராகவே இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், திருவள்ளூரிலும் ஒரு Cath Lab ஒன்று இந்த மானியக் கோரிக்கை அறிவிப்புக ளில் வரவிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், காங்கிரஸ் பேரியக்கத் தைச் சேர்ந்த தி. ராமச்சந்திரன் பேசுகி றபோது, மகளிர் இளம் பருவத்தின ருக்கு ஒரு கர்ப்ப பை வாய் புற்றுநோய் செயற்கைக் கால்கள் வேண்டுமென்கிற கோரிக்கையையும் அங்கே ஒரு 108 ambulance வேண்டுமென்கிற கோரிக் கையையும் தமிழ்நாட்டின் முதலமைச் சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, மக்களைத்தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாட் டின் முதலமைச்சர் அவர்களிடத்தில் தொடங்கி வைக்கின்ற, அன்றைக்கு அந்த மலை கிராமங்களிலே இருந்த அந்த இரண்டு கால் இழந்தவர்களுக்கு செயற்கை கால்களையும் அங்கே ஒரு புதிய 108 ambulanceயும் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

மலை கிராமத்து மக்களை யாரும் இன்றைக்கு கண்டு கொள்வதில்லை என்று அவர் பேசும்போது சொன்னார். இதுவெல்லாம் கடந்த காலம். இன் றைக்கு ஏறத்தாழ தமிழகத்தை பொறுத்தவரை இரண்டாயிரம் மலை கிராமங்கள் இருக்கிறதென்றால் அதில் நானே இதுவரை 400க்கு மேற்பட்ட மலை கிராமங்களுக்கு நடந்துசென்று பார்த்து இருக்கிறேன். (மேசையைத் தட் டும் ஒலி) இன்னும் இந்த ஆண்டும்கூட நிச்சயம் மீதம் இருக்கிற எல்லா மலை கிராமங்களுக்கும் சென்று மருத்துவ பரி சோதனைகள், அவர்களுக்கு என்ன தேவைகள் இருக்கிறதோ அதை செய்ய இருக்கிறோம். அதேபோல இராமச்சந்தி ரன் அவர்களுடைய கோரிக்கை இந்த

நீதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிக் காட்டுதலின்படி மலை கிராமங்களில் புதிய மருத்துவமனைகள், மலை கிரா மங்களுக்கு தேவையான புதிய இரு சக் கர வாகன ambulanceகள் புதியதாக அறிமுகப்படுத்த இருக்கிறது என்பதை யும் இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த துறையில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் குறித்து, நான் இங்கே ஒரு நிமிடம் சொல்லியாகவேண்டும். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அளித் துக்கொண்டிருக்கிற முக்கியத்துவம் அத னால் இன்றைக்கு எத்தனைபேர் பயன் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை தலைப்பு செய்திகளாக நான் அறிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

2021-ஆம் ஆண்டு முன்பு DME என்று சொல்லப்படுகிற மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தில் நாள்தோறுமான புறநோயாளிகளின் எண்ணிக்கை நாற்பத்து எட்டாயிரத்து முன்னூற்று எட்டு ஆக இருந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு நாளைக்கு நாள்தோறுமான புறநோயாளிகளின் எண்ணிக்கை என்பது ஓர் இலட்சத்து ஏழு ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழு ஆக இருக்கிறது. அப்படியானால் நூற்று இருபது சதவிகிதம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அந்த நிலை இன்றைக்கு உயர்ந்து நூற்று இருபது சதவிகிதம் கூடியிருக்கிறது.

அதேபோல் மருத்துவம் மற்றும் ஊரக நல இயக்ககத்தில் இருக்கிற மாவட்ட அரசு மருத்துவமனை, வட்டார மருத்துவமனை களில் நாள்தோறு மான புறநோயாளிகளின் எண் ணிக்கை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இலட்சத்து முப்பத்து இரண் டாயிரத்து ஐநூற்று தொன்னூறு, இன்றைக்கு இரண்டு இலட்சத்து எட்டு ஆயிரத்து நானூற்று அறுபது, ஐம்பத்து எட்டு சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மூன்று இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று பத்து ஆக இருந்தது. இன்றைக்கு நான்கு இலட்சத்து நாற்பது ஓராயிரத்து எண்ணூற்று முப்பத்து ஆறு ஆக நாற் பத்து எட்டு சதவிகிதம் உயர்ந்து இருக்கி றது. இந்த அரசின் நோக்கமெல்லாம் ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் மக்கள் அரசு மருத்துவ சேவைகளை முழுமை யாக பயன்படுத்திக்கொள்ள வேண்டு மென்பதுதான் அந்தவகையில் இன் றைக்கு மளமளவென்று உயர்ந்துக்கொண்டிருக்கிற இந்த மக் கள் மருத்துவ சேவை என்பது நிச்சயம் நூறு சதவிகிதம் வரும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தத் துறையில் 2021ல் 110 அறிவிப்புகளை அறிவித்தோம். 110 அறிவிப்புகளுக் கான அந்த action report என்பது புத்தக மாக வெளியிடப்பட்டு, அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் தரப்பட்டது. 2022ல் 136 அறிவிப்புகளை வெளி யிட்டோம். அந்த 136 அறிவிப்புகளுக் கும் action report புத்தகம் மன்ற உறுப் பினர்களுக்கு தரப்பட்டது. கடந்த 2023ல் 106 அறிவிப்புகளை அறிவித் தோம். அந்த 106 அறிவிப்புகளுக்கான action book இன்றைக்கு ஒவ்வொரு டைய மேசையின்முன்பும் வைக்கப்பட் டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாது ஒரு video clippings ஒன்று இந்தத் துறையின் நடவடிக்கை கள் குறித்த ஒரு video clippings இன் றைக்கு உங்கள் முன்பு வைக்கப்பட்டி ருக்கிறது. ஒரு புத்தக வடிவிலான அந்த video clippings அனைத்து மன்ற உறுப்பினர்களும் பார்க்கவேண்டு மென்று உங்களை அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மக்களைத் தேடி மருத்துவம்

முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி, கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி யில் தொடங்கிய அந்தத் திட்டம் என்பது ஒரு முதலமைச்சர் ஒரு திட்டத்தை தொடங்கினால், தொடங்கிவைத்த அன் றைக்கு, அதோடு மறந்து விடுவார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தொடங்கி வைக்கிற அன் றைக்கு சொன்னது, மக்களைத்தேடி மருத்துவத்தின்மூலம் ஏழையெளிவர்க ளுக்கு கிடைக்கிற இந்த மருத்துவ வசதி, இன்றைக்கு ஒரு பயனாளிக்கு தருகி றேன். ஒரு கோடியாவது பயனாளிக்கு தருகிற அந்த நல்ல நிலை வரவேண்டு மென்று சொன்னார்கள். சொன்ன தோடு மட்டுமல்ல, முதல் பயனாளிக்கு அவர் கிருஷ்ணகிரியில் வந்து தந்தார். ஐம்பது இலட்சமாவது பயனாளிக்கு சித் தலபாக்கத்திற்கு வந்து தந்தார். ஒரு கோடியே ஓராவது பயனாளிக்கு திருச்சி சன்னாசிப்பட்டியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் வந்து தந்தார். அந்தவகை யில் இன்றைக்கு மக்களைத்தேடி மருத் துவத்தில்மூலம் தமிழ்நாட்டில் பயன் பெற்றிருப்போரின் எண்ணிக்கை ஒரு கோடியே எண்பத்து நான்காயிரத்து, இருநூற்று எண்பது பேர் பயன் பெற்றி ருக்கிறார்கள்.

இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48-திட்டம்

அதேபோன்று 2021 டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி மேல்மருவத்தூரில் ஒரு திட்டத்தைத் தொடங்கினார்கள். இன்னு யிர் காப்போம், நம்மை காக்கும் 48 என்று, இன்னும் மூன்று ஆண்டுகள் கூட நிறைவடையவில்லை. அந்தத் திட் டத்தின்மூலம் இதுவரை உயிர் பெற்றி ருப்பவர்கள், விபத்துகளிலிருந்து மீண்டு இன்றைக்கு உயிர் பெற்றிருப்ப வர்களின் எண்ணிக்கை 2,61,500 பேர். அதற்காக இந்த அரசு செலவிட்டி ருக்கிற தொகை ரூபாய் இருநூற்று இரு பத்தெட்டு கோடியே அறுபத்து இரண்டு இலட்சம்.

இன்றைக்கு உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்ற இரு பெரும் நோய் கள், ஒன்று இருதய பாதிப்புகள், இன் னொன்று புற்றுநோய். இருதய பாதிப்பு கள் என்கின்ற வகையில் இள வயதினருக்கும் அந்த இருதய பாதிப்பு கள் இன்றைக்கு தொடர்ந்து கொண்டி ருக்கின்றநிலையில்தான் முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டுமென்கின்ற வகையில், தமிழகத்திலே இருக்கின்ற துணை சுகா தார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலை யங்கள் 8,713, ஆரம்ப சுகாதார நிலை யங்கள் 2,286 ஆக 10,999 மருத்துவ மனைகளிலும் இதுவரை வேறு எப்போதும் இல்லாத அளவிற்கு இருதய பாதிப்பிற்கு முன்னெச்சரிக்கையாக loading doses என்கின்ற மருந்தை இருப்பு வைக்க வேண்டுமென்று இந் தத் துறைக்கு அறிவுறுத்தி, Aspirin 2, Clopidogrel 4, Atorvastatin 8 என் கின்ற இந்த மூன்று மருந்துகளையும், 14 மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தை இருதய பாதிப்புக்கு உள்ளானவர்க ளுக்கு முதலிலே தந்து, அந்த உயிர் களை காப்பாற்றுகிற அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 2023 ஜூன் திங்கள் 27 ஆம் தேதி கோவை மதுக் கரை ஒன்றியத்திலே இருக்கின்ற மலு மிச்சம்பட்டியில் அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் இதுவரை உயிர் காப் பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 8,884 பேர். அதேபோல் சிறுநீரகப் பாதுகாப்பு திட்டம், சிறுநீரகம் Dialysis transplant என்கின்ற அந்தப் பாதிப்பை பெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில், சிறுநீரகப் பாதிப்புகளிலிருந்து மக்க ளைப் காப்பதற்கு சேலத்தில் காடையாம் பட்டி என்கின்ற இடத்தில் 2023 ஜூலை திங்கள் 10 ஆம் தேதி ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் பெயர் சிறுநீரகப் பாதுகாப்புத் திட்டம். அந்தத் திட்டத்தின்படி இன்றைக்கு எவ்வ ளவு பொது மக்களுக்கு பரிசோதனை கள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என் றால் 56,07,385 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களைத் தேடி மருத்துவம் என் கின்ற அந்த மகத்தான திட்டத்தில் பயன் பெற முடியாத ஆண்கள், இங்கே பேசிய மன்ற உறுப்பினர்கள் சொன்னது போல், வீட்டில் பெண்கள் இருப்பார்கள், முதியோர் இருப்பார்கள், மருத்துவர்கள் செல்லும்போது ஆண்கள் பணிக்காக தொழிற்சாலைகளுக்கு சென்றிருப்பார் கள். அவர்களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர் கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் என்கின்ற ஒரு திட்டம் 912024 அன்று தொடங்கப்பட்டது.

கடம்பத்தூரில், Hyundai Mobis plant ல் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் 488 தொழிற்சாலைகளில் இன்றைக்கு பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கி றது. அந்த 488 தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற 2,94,535 தொழிலா ளர்களுக்கு அந்தத் திட்டம் இன்றைக்கு முழுமையாகச் சென்றடைந்திருக்கிறது. அதேபோன்று மக்களைத் தேடி ஆய்வ கம், இதுகுறித்து கடந்த இரண்டு நாட்க ளுக்கு முன்னாள் கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்தேன், திரும்பவும் அதைப் பற்றி இங்கே சொல்வதைத் தவிர்த்துக் கொள்கிறேன்.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

அந்தத் திட்டம் ஒன்று. கலைஞரின் வருமுன் காப்போம், வருமுன் காப் போம் என்கின்ற திட்டத்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மிகச் சிறப் பான திட்டமாக தமிழ்நாட்டில் முன்னெ டுத்தார்கள். கடந்த கால ஆட்சியில், ஒரு 10 ஆண்டு காலமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வருமுன் காப்போம் என் கின்ற திட்டத்தை, கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற திட்டமாக மாற்றி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 3 இடங்க ளிலும், மாநகராட்சிக்கு 4 இடங்களி லும், சென்னையைப் பொறுத்த வரை யில் 15 இடங்களிலும் என்று சொல்லி, ஆண்டான்றுக்கு 1,250 முகாம்கள் நடத்த வேண்டுமென்று சொல்லி கடந்த 3 ஆண்டுகளில் 4,042 முகாம்கள் நடத் தப்பட்டு,

இதுவரை அதன்மூலம் பயன்பெற்றி ருப்பவர்கள் 36,69,326 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இங்கே பேசியவர்கள் சொன்ன தைப்போல புற்றுநோய் என்பது மிகப் பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத் தும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக ஈரோடு, கன்னியாகுமரி, திருப்பத்தூர், ராணிப் பேட்டை போன்ற பல்வேறு மாவட்டங்க ளில், தோல் பதனிடும் தொழிற்சாலை அதிகம் இருக்கின்ற பகுதிகளில் புற்று நோய் பாதிப்புகள் அதிகரித்துக்கொண் டிருக்கும் சூழலில்தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் சொன்னார், அங்கே இருக்கிற அனைவரையும் புற் றுநோய்க்கான screening செய்து, அதில் பாதிப்புக்குள்ளானவர்களை முதல் நிலை, இரண்டாம் நிலையில் இருந்தால் காப்பாற்றி விடலாம். மூன் றாம் நிலை, நான்காம் நிலை என்கிற போது இறப்பை சந்திக்க நேர்கிறது. எனவே, முதல் ஒன்று, இரண்டு என் கின்ற நிலையில் இருப்பவர்களை கண் டுபிடிப்பதற்கான screening செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

அந்த வகையில் ஈரோடு

முதல்வரின் சீரிய மருத்துவத் திட்டங்களை பல்வேறு மாநில - வெளிநாட்டு மருத்துவர்கள் பாராட்டு!

10,999 மருத்துவமனைகளிலும் இதய பாதிப்பிற்கு முன்னெச்சரிக்கை சிகிச்சை!

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்